அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 156 /2017
தேதி : 14.12.2017

**திருச்செந்தூர் முருகன் கோவில் விபத்து**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்**

திருச்செந்தூர் முருகன் கோவிலில் வள்ளி குகை அருகே பிரகார மண்டபத்தின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் ஒரு பெண் பலியானதோடு 4 பேர் காயமடைந்ததாக தெரிய வந்துள்ளது.

ஆலயங்கள் போன்ற திருத்தலங்களில் உள்ள கட்டிடங்கள், சுற்றுச்சுவர்கள், மேற்கூரை உள்ளிட்ட அமைப்புகளில் தொடர்ந்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் உறுதித்தன்மையை ஆலய நிர்வாகம் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். குறிப்பாக, மழைக்காலம், திருவிழாக் காலங்கள் போன்ற சமயங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

துரதிருஷ்டவசமாக திருச்செந்தூர் ஆலய விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினருக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com